பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 20 வைகாசி 22 ஜு. ஆகிர் 28 இதழ் 112
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 5-6-78

லாலா சோப்
பிரகாச சலவை!
பளிச்சிடும் வெண்மை!
ஈழம் எங்கும் கிடைக்கும்
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

## அதிகமான வரிச்சலுகை

(கொழும்பு)
சுதந்திர வர்த்தகவலயத்தில் ஈடுபடும் வர்த்தகர்களுக்கு அதிகஅளவில் வரிச்சலுகைகள் அளிக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தவலயத்தில் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிறுவனங்களுக்கு கணிசமான அளவு வரிச்சலுகைகளை அளிக்கும் வகையில், வருமான வரி உத்தேசசட்டம் திருத்தப்பட்டுள்ளது.

# ரயில் சேவைகள் விஸ்தரிக்கப்படும்

## மாத்தளை - கெக்கிராவ சேவை முதலில் ஆரம்பம்

(மாத்தளை)

மலையக, கிழக்குமாகாண, கரையோரப்பகுதி ரயில் சேவைகள், விரைவில் விஸ்தரிக்கப்படவிருக்கின்றன. மாத்தளையிலிருந்து தம்புள்ள வழியாக கெக்கிராவவரைக்கான ரயில் விஸ்தரிப்பு வேலைகள் முதலில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

மேற்கண்ட விபரங்கள் நேற்று இங்கு நடைபெற்ற ரயில்வே விசாரணைக்குழு முன்னர் தெரிவிக்கப்பட்டன.

ரயில்வே விசாரணைக்குழுவினர் நேற்று, மாத்தளை ரயில் நிலையத்தில் சாட்சியங்களைப் பதிவுசெய்துகொண்டனர் பிரயாணிகள் சங்கங்களைச் சார்ந்தவர்களும் பொதுமக்களும் நேற்று இக்குழுமுன் சாட்சியமளித்தனர்.

தோட்டக் கைத்தொழில் பிரதியமைச்சர் திரு. அலிக் அலுவிஹாரை நேற்று இக்குழுமுன் பேசுகையில், ரயில்சேவை விஸ்தரிப்பு பற்றி அரசாங்கம் கொண்டுள்ள திட்டங்கள் பற்றிக் கூறினார்

மாத்தளையிலிருந்து கெக்கிராவ வரை ரயில்சேவை விஸ்தரிக்கப்படுமென்றும் இச்சேவை தம்புள்ள வழியாக இடம்பெறுமென்றும் கூறினார்.

இப் புதிய சேவை மூலம் அரசுக்கும் மக்களுக்கும் பல நன்மைகள் கிடைக்குமென்று குறிப்பிட்ட பிரதியமைச்சர், மகாவலி அபிவிருத்தித்திட்டம் மூலம் ஏற்படும் போக்குவரத்துக் கஷ்டங்களை இப் புதிய சேவை தீர்த்துவைக்குமென்று தெரிவித்தார்.

### கரையோர கிழக்குப் பகுதிகளில்

புதிய ரயில் விஸ்தரிப்புத் திட்டத்தின்கீழ், கிழக்கு மாகாணத்திலும், கரையோரப் பகுதிகளிலும் புதிய ரயில் பாதை அமைக்கப்படுமென்று தெரிவித்த பிரதி அமைச்சர் திரு. அலிக் அலுவிஹாரை, மாத்தளையிலிருந்து தம்பாலை அம்பாந்தோட்டை வழியாக திஸ்ஸமகாராமவுக்கு ரயில் சேவை விஸ்தரிக்கப்படும் என்றும் பதுளையிலிருந்து மொனறாகலை, பிபிலை வழியாக மட்டக்களப்புக்கு ரயில்பாதை அமைக்கப்படும் என்றும் கூறினார்.

# ஸியாவுர் ரஹ்மான்

## கோடி வாக்குகளால் வெற்றி

ராவல்பிண்டி, ஜூன். 4
பங்களாதேஷ் ஜனாதிபதி தேர்தலில் மேஜர் ஜெனரல் ஸியாவுர் ரஹ்மான் வெற்றி பெற்றுள்ளார்.

பங்களாதேஷ் ஜனாதிபதித் தேர்தல் நேற்று நடைபெற்றது. இத்தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ஸியாவுர் ரஹ்மானும், ஜெனரல் உஸ்மானும் மற்றும் 8வேட்பாளர்களும் போட்டியிட்டனர்

ஜனாதிபதித்தேர்தல் பற்றிய உத்தியோகபூர்வமான இறுதி முடிவுகள் அறிவிக்கப்படாத போதிலும், இச்செய்தி எழுதும்வரை இன்று இரவு கிடைக்கப்பெற்ற முடிவுகளின்படி, மேஜர் ஜெனரல் ஸியாவுர் ரஹ்மானே பெரும்பான்மை வாக்குகளால்வெற்றி பெற்று முன்னணியில் நிற்கின்றார்.

எண்பத்தைந்துசதவீதமான முடிவுகள் வெளியாகிவிட்டன. இதன்படி மேஜர் ஜெனரல் ஸியாவுர் ரஹ்மானுக்கு ஒரு கோடியே 37 லட்சத்து 87 ஆயிரம் வாக்குகளும், ஜெனரல் உஸ்மானுக்கு 34லட்சம் வாக்குகளும் கிடைத்துள்ளன. ஏனைய வேட்பாளர்கள் அனைவரினதும் மொத்தவாக்குகளின் எண்ணிக்கை இரண்டு லட்சத்துக்கும் சற்றுக்கூடுதலாகக் காணப்படுகிறது.

## டெஸ்ட் கிரிக்கெட்: இங்கிலாந்து - 451

பர்மிங்ஹாம், மே 4
பாகிஸ்தானுக்கும் இங்கிலாந்துக்குமிடையே இங்கு நடைபெறும் கிரிக்கெட் டெஸ்டின் மூன்றாவது நாளான இன்று பாகிஸ்தான் தனது இரண்டாவது இன்னிங்ஸில் 1 விக்கெட்டை இழந்து 95 ஓட்டங்களை எடுத்தது.

இங்கிலாந்து தனது முதல் இன்னிங்ஸில் எட்டு விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 451 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

## நவத்துக்கு வயது 49



(மட்டுவில்)
சாவகச்சேரி எம். பி, திரு வி. என். நவரத்தினத்திற்கு இன்று 49 வயதாகிறது.

அவரது பிறந்த நாளை பெருவிழாவாகக் கொண்டாட அவரது ஆதரவாளர்கள் விருப்பம் தெரிவித்த போதிலும் அதற்கு அவர் மறுத்துவிட்டார்.

எளிமையாக அவரது பிறந்த தினம் கொண்டாடப்படும் எனத் தெரிகிறது.

# விரக்தியுறும் மாணவர்கள்

## இவர்கள் பிரச்னையைத் தீர்ப்பது எமது கடமை''

— அமிர்

(சுழிபுரம்)
''பாடசாலையின் வளர்ச்சி பெற்றோர் ஆசிரியர் கைகளிலேயே தங்கியுள்ளது. மாணவர்கள் இன்று விரக்தியுற்ற நிலையிலுள்ளனர். நாளைய நிலைமை என்ன என்று நிர்ணயிக்க முடியாத நிலையில் மாணவ சமூகம் ஏங்கிக்கொண்டு வாழ்கின்றது. இதற்கு ஓர் நல்ல பரிகாரம் காணவேண்டிய பொறுப்பு எங்களைச் சார்ந்துள்ளது. இவ்வேளையில் நாம் எமக்குள் பிரச்னைப் படுகின்றோம். தனி விடயம் முதல், பொது விடயம்வரை நிறைவேற்ற முடியாதவாறு எமக்குள் போட்டி பூசல். ஏன் இந்த நிலை என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். பொது விடயங்களிலும், தனி விடயங்களிலும் ஒன்றுபட்டு செயல்படும் நாளே எங்கள் விடிவு காலமாகும்''

இவ்வாறு மூளாய் சைவப் பிரகாச வித்தியாசாலை பெற்றோர் தினவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொ

(6ம் பக்கம் பார்க்க)

உங்களுக்கு வேண்டிய
★ கைக்கடிகாரங்கள்
★ சுவர் மணிக்கூடுகள்
சைக்கிள் உதிரிப்பாகங்கள்
வடஇலங்கையில் மலிவாகக் கிடைக்குமிடம்
நேரடி இறக்குமதியாளரான
நா. சபாபதிவம் அன் கோ.,
9475 யாழ்ப்பாணம். போன்: 454.

# காணமற்போன சிசு கண்டுபிடிக்கப்பட்டது!

## கைதான பெண்ணுக்கு 12ம் திகதிவரை றிமாண்ட்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் மருத்துவமனையிலிருந்து கடத்தப்பட்ட ஒருநாள் குழந்தையை பொலிஸார் மீட்டுள்ளனர்.

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த மங்கலேஸ்வரி என்றபெண் இச்சிசுவை கடத்தியதாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர், யாழ் நீதிவான் திரு. கே. வி. நவரத்தினம் முன்னிலையில் நேற்று ஆஜர்செய்யப்பட்டபோது, நீதிவான் இம்மாதம் பன்னிரண்டாம் திகதிவரை றிமாண்டில்வைக்குமாறு உத்தரவிட்டார்.

சார்ஜன்ட் யேசுதாசன், கான்ஸ்டபிள் ஏ. இராசதுரை ஆகியோர் இக்குழந்தையை கண்டுபிடித்தனர். குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி திரு. சுமண பண்டாரா இச்சம்பவம் தொடர்பாக விசாரணைசெய்து வருகின்றார்.

ஐயனார் கோவில் வீதியில் உள்ள தனியார் மருத்துவமனையில், இளவாலையைச் சேர்ந்த பிரான்சிஸ் அம்மா கடந்த மாதம் 30ம் தேதி இக் குழந்தையை பிரசவித்தார் மறுநாள் பிற்பகல் அங்கிருந்து இக்குழந்தை காணமல் போய் விட்டது.

பொலிஸாரின் தீவிர முயற்சியினால் நேற்று இக்குழந்தை வண்ணார்பண்ணையில் ஒரு வீட்டில் கண்டுபிடிக்கப்பட்டது.

### கடந்த வருடம்

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியிலும் கடந்த வருடம் (அங்கு பிறந்த) சிசுவொன்று வார்ட்டில் வைத்து காணமற்போனதும் இச்சிசு இன்றுவரை கண்டுபிடிக்கப்படாததும் வாசகர்கள் அறிந்ததே.

(ஈ)

ஜூன் 5: உலக சுற்றுடல் பாதுகாப்புத் தினம்

# இயற்கை எமக்களித்த சம்பத்துக்களை பேணிப் பாதுகாப்போம்!

தெள்ளத் தெளிந்த நீரை வாயார அள்ளிப் பருகின்றோம்; தூய காற்றினை நெஞ்சு நிறைய சுவாசிக்கின்றோம்; பறவைகளின் பண்ணிசைகளைக் காதாரக் கேட்டு மகிழுகிறோம்; வளப்பமிகு வனங்களின் ரம்மியத்தில் மனதைப் பறிகொடுத்து நிற்கின்றோம்; அரிய விலங்கினங்களின் அழகில் மயங்குகின்றோம்- இவையாவும் இயற்கை எமக்களித்த வரப்பிரசாதங்கள்; சம்பத்துக்கள்!

மனிதகுலம் வாழும்வரை போற்றிப் பேணப்பட வேண்டிய இச் சம்பத்துக்கள் காலப் போக்கில் அழிந்து படுவதை இயற்கையை நேசிக்கும் எவராலும் அனுமதிக்க முடியாது.

விஞ்ஞான, தொழில் நுட்பப் புரட்சியும் தொழிற்துறைப் பெருக்கமும் இயற்கை மீது பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளன. நாட்டின் பொக்கிஷமெனக் கருதப்படும் காடுகள் அழிக்கப்படுவதும் ஆறுகள், வாவிகள் அசுத்தமடைவதும் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை நாம் காணக்கூடியதாக உள்ளது.

யூனெஸ்கோ புள்ளி விபரங்களின் பிரகாரம் இன்றி உலகில் முன்னிருந்த காடுகளில் மூன்றிலிரு பங்கினை மனிதன் அழித்துள்ளான், கடந்த நாலு நூற்றாண்டு காலத்தில் 150 க்கும் அதிகமான விலங்கினங்களும் பறவையினங்களும் இல்லாதொழிந்துள்ளன. அதே வேளையில் ஆண்டு தோறும் ஏறத்தாழ 5,000 தொன்கள் பாதரசம் உலக சமுத்திரத்தினுள் வீசப்படுகின்றது. 160,000 லட்சம் தொன்கள் பிராணவாயு எரிக்கப்படுகிறது. இதன் விளைவாக 240,000 லட்சம் தொன்கள் அளவினதான கரியமிலவாயு வளிமண்டலத்தினுள் கலக்கிறது.

இயற்கைச் சூழல் அசுத்தமடைகின்ற இயற்கைச் செல்வங்கள் அழிந்து படுகின்ற இந்த அபாயகரமான போக்கினைத் தடுத்து நிறுத்த முடியாதா?

தொழிற்துறை உற்பத்தியைக் கட்டுப்படுத்தக் கோருவது மனிதகுல முன்னேற்றத்தைப் பொறுத்தளவில் ஒரு அநீதியான கோரிக்கையாகும். அதே வேளையில் தொழிற்துறைக் கழிவுப் பொருட்களினால் வளிமண்டலம் கடலும் அசுத்தமடைவது கண்டு வாளாவிருப்பதும் அநீதியானதுதான். விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் இன்று பெரிதும் முன்னேறியுள்ள ஒரு நிலையில் நவீன சுத்திகரிப்பு சாதனங்களை உருவாக்குவது சாத்தியமான காரியம். இன்று சுற்றுடலின் சுத்தத்தைப் பேணுவதற்காக சில நாடுகள் பல கோடிக் கணக்கான பணத்தைச் செலவிடுகின்றன, ஆனால் ஒரு சில நாடுகளின் முயற்சியினால் இப்பிரச்னைக்குப் பரிகாரம் காணமுடியாது. பிரச்னையும் உலகந் தழுவியது அதுபோல இதற்கான தீர்வும் உலகந் தழுவியதாக இருக்க வேண்டும்.

இயற்கைக்கு எல்லைகள் இடையாது. ஆறுகள் பல வேறு நாடுகளின் எல்லை கடந்து பாய்கின்றன. ஒரு கண்டத்தில் இயற்கைச் சுற்றுடலுக்கு ஏற்படும் ஹானி எவ்வித்திலேனும் இதரமண்டலங்களையும் பாதித்தே தீரும். எனவே உலகநாடுகள் யாவும் இப்பிரச்னைக்குப் பரிகாரம் காண ஒரே சமயத்தில் ஒத்துழைக்க வேண்டும்.

சுற்றுடற் பாதுகாப்பின் பொருட்டு சில நாடுகள் மேற்கொண்டு வரும் பணிகளை உதாரணங்களாக மற்றைய நாடுகளும் பின்பற்ற வேண்டும். சோவியத் யூனியன் போன்ற சிலநாடுகளில் சுற்றுடலைப் பேணுவது தொடர்பான விஷயங்களைக் கவனிக்கவென ஒருதனி அமைச்சே உள்ளது. யூனெஸ்கோவின் இணைப்பு ஸ்தாபனமாகிய மனித, சூழல் ஆய்வு ஸ்தாபனமும் சுற்றுடலைப் பேணும் பிரச்னைக்குத் தீர்வு காணுவதில் உலக நாடுகளின் பிரயத்தனங்களை ஒருமுனைப்படுத்தப் பாடுபட்டு வருகிறது.

நாம் வாழும் இந்த உலகம் ஏறத்தாழ 40,000 கோடி மக்களின் வசிப்பிடமாக உள்ளது. எமது உலகின் எழிலையும் சுத்தத்தையும் பேணிப் பாதுகாப்பது உலகிலுள்ள ஒவ்வொரு பிரஜையினதும் கடமையாகும். உலக சுற்றுடற் பாதுகாப்புத் தினமாகிய இன்று இப்பணியினை வெற்றிகரமாக நிறைவேற்ற ஒவ்வொரு நாடும் உறுதி பூண வேண்டும்.

பெரி சண்முகநாதன்

ஒட்டுசுட்டான் அகதிகளுக்கு

# ரூ. 60,000 செலவில் பத்துக் கிணறுகள் தோண்டப்படும்

(ஒட்டுசுட்டான்)

ஆகஸ்ட் கலவரத்தில் அகதிகளாகி ஒட்டுசுட்டானில் குடியமர்த்தப்பட்டுள்ள ஐம்பது குடும்பங்களின் நலன் கருதி பத்துக் கிணறுகள் தோண்டிக் கொடுக்கப்படவுள்ளன.

இதற்கான ஆரம்பவேலைகளும் தொடங்கப்பட்டுவிட்டன.

அகதிகள் புனர்வாழ்வுச் சபையினர் இதற்கான நடவடிக்கைகளைத் தீவிரமாக மேற்கொண்டுள்ளனர்.

மேற்படி குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா இருஏக்கர் காணி வீதம் வழங்கப்பட்டு குடிசை வசதியும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி கிணறுகள் வெட்டுவதற்கு 60,000 ரூபா வரை செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறதாம்.

இங்கு தற்காலிகமாக கட்டடம் ஒன்றில் பாடசாலை ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பாடசாலைக்கான உபகரணங்களை முன்னாள் கல்வி அதிபர் திருமதி நடராஜா வழங்கியுள்ளார். (உ)

## சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய சங்காபிஷேகம் இன்று நடைபெறவிருக்கிறது.

அன்றுகாலை அடியார்களுக்கு நவோத்தர சகஸ்ர சங்காபிஷேகமும் விஷேச பூசை ஆராதனைகளும் நடைபெறும் யாழ்ப்பாண இசையாளர் சங்க ஆதரவில் விசேட மேளக்கச்சேரிகள் இடம்பெறும் பகல் அன்னதானமும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (கெ)

## "அன்புப்பாதையில் நல்ல வழிகாட்டிச் சென்றவர்"

(உடுப்பிட்டி)

"இறைவனின் போதனைகளை எமக்கு ஊட்டி நல்ல வழிகாட்டியாக இருந்து எமமைத் தாயன்புப்பாதையில் இட்டுச் சென்றவர் அடிகளார் ஆவார். அவரது புனித பணி எமக்கு மட்டுமல்ல, இதரபகுதிகளுக்கும் கிடைக்கவேண்டும். அவரது சேவையை எல்லாம் வல்லவர் எத்தோலிக்கரும் பெறவேண்டும். அவர் செல்லுமிடமெல்லாம் தூயவாழ்வை நிலைநிறுத்துவார்"

இவ்வாறுகரவெட்டிப்பகுதிக் குருவராகப் பணிபுரிந்து இம் மாத நடுப்பகுதியிலிருந்து நெடுந்தீவுக்கு இடமாற்றம் பெற்றுச்செல்லும் அருட் திரு. பீட்டர் துரைரத்தினம் அடிகளாருக்கு கரவெட்டி புனித திரேசம்மா சபையினால் அளிக்கப்பட்ட தேனீர் விருந்துபசார வைபவத்தில் தலைமை வகித்த தப்பேகிய கரவெட்டி லூர்த்து மாதா கனிஷ்ட மகா வித்தியாலய பாடசாலை அதிபரும், திரேசம்மாள் சபைத்தலைவியுமான சங். சகோதரி அல்பிரேடா கூறினார்.

இவ்வைபவத்தில் செல்வி தவராணி ராஜதுரை செல்வி வசிந்தா நீக்கொலஸ் ஆகியோரும் பேசினார்கள்.

# 'பனைவளத்தினால் வருடம் பத்துகோடி ரூபா கிடைக்கும்'

— பருத்தித்துறை எம். பி.

(நெல்லியடி)

கிராம மக்களிடையே ஏற்படும் பிரச்னைகளை அப்பகுதியிலுள்ள மக்களே தீர்த்து வைத்தல்வேண்டும். அதற்காக கிராமங்களில் உள்ள அறிவாலயங்கள் முன்னின்று உழைத்துவரவேண்டும்.

பருத்தித்துறை தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் திரு. க. துரைரத்தினம் தென்னவில் அறிவகம் கட்டிடத்தை திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. க. துரைரத்தினம் மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது, வடபகுதியில் உள்ள மக்கள் தமக்குள்ள நீர்வளம் மண்வளம் மற்றும் நிதிவளங்களை பாதுகாத்துக் கொள்ளுதல் வேண்டும்: நீரினை வீணே உபயோகிக்காது பயனுள்ள வழிகளில் பயன்படுத்தவேண்டும். எமது பகுதி பனைவளத்தால் செழிப்புற்று விளங்கிவருகின்றது. சரியான முறையில் நாம் பனைவளத்தை பேணுவோமானால் ஆண்டில் சுமார் 10 கோடி ரூபாவை வருமானமாகப் பெற முடியும். திரு. செல்வநாயகமும் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பாக கொண்டுவந்த பிரேரணை இன்றுதான் பயனளிக்கவுள்ளது. பனம் அபிவிருத்திச் சபை ஒன்று நிறுவப்பட வேண்டுமென்றே நாம் கோரியிருந்தோம்.

நமது வளங்களை எல்லாம் நாம் பயன்படுத்த முடியாதுள்ளது. நம்மிடம் ஆட்சி அதிகாரம் இல்லாததால் இந் நிலைமை ஏற்பட்டது. இந் நிலைமையினை அகற்றவே நாம் போராடிவருகின்றோம். வளங்களை நாம் பயன்படுத்தி வருவோமானால் வேலையில்லாப் பிரச்னையை சுலபமாக தீர்த்துக்கொள்ளவழியேற்படும். படித்த வாலிபர்கள் தாமாகவே தமக்குரிய வேலைகளை தேடிக்கொள்வார்கள்.

திரு. தி. கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக் கட்டிடத் திறப்புவிழாவில் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. எம். குணநாயகம் உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். குணநாயகம் உட்பட பலரும் உரையாற்றினர். (ஃ)

## "50,000 ரூபா செலவில் நடராசா அரங்கு"

(உடுப்பிட்டி)

"அமரர் நடராசாவின் கடந்தகால சேவைகளைக் கௌரவிக்கு முகமாக அவரது ஞாபகார்த்தமாகத் திறந்த வெளி அரங்கு ஒன்றை நிறுவப் பண்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின்கீழ் ஐம்பதினாயிரம் ரூபா ஒதுக்கியுள்ளேன்."

இவ்வாறு இருபத்தைந்து வருட காலமாக பருத்தித்துறை நகரசபைத் தலைவராகப் பணிபுரிந்து காலஞ்சென்ற அமரர் நடராசாவின் உருவப் படத் திரைநீக்க வைபவத்தில் பேசுகையில், பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் கூறினார்.

திரு. துரைரத்தினம் எம். பி. தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"ஸ்தலஸ்தாபன சபைகளின் வரலாற்றில் முப்பது வருட காலமாக நகரசபையின் உறுப்பினராகவும், 25 வருடங்களாக நகரசபைத் தலைவராகவும் விளங்கிச் சாதனை புரிந்தவராவார். இவர் ஒரு சிறந்த குற்றவியல் வழக்கறிஞராகவும் திகழ்ந்து சட்டத்துறைக்குப் பெருமை தேடித்தந்தார். அவர் மறைந்தாலும் அ...

[5-ம் பக்கம் பார்க்க]

## நடன ஆசிரியையாக ரேலங்கி நியமனம்

(யாழ்ப்பாணம்)

செல்வி ரேலங்கி செல்லையா மீசாலை வடக்கு வீரசிங்கம் மகாவித்தியாலயத்திற்கு இம் மாதம் முதல் நடன ஆசிரியையாக நியமிக்கப்பட்டுள்ளார். செல்வி ரேலங்கி அமரரான பிரபல நாடகக்கலைஞர் ஆர். கே. கே. வி. செல்லையாவின் புதல்வியாவர்.

ஈழத்தில் விரைவில் இருக்கும் 'தெய்வம் தந்தவீடு' திரைப்படத்தில் பிரதம பாத்திரம் தாங்கி செல்வி ரேலங்கி நடிக்கிறார். இப்படத்தில் செல்வி ரேலங்கி நர்த்தகியாக நடிப்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## மகாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

சரவணை - பள்ளப்புலம் ஸ்ரீ முருகப்பெருமானின் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் இம் மாதம் 9ம் திகதி காலை 6மணியளவில் நடைபெறவுள்ளது. கிரியா நிகழ்ச்சிகள் 5ம் திகதி பிற்பகல் 5 மணி அளவில் ஆரம்பமாகவுள்ளன. பிரதம குரு சிவஸ்ரீ. கு இராமநாதக் குருக்கள் தலைமையில் பன்னிரண்டு குருமார் கும்பாபிஷேக வைபவத்தை நடாத்துவார்கள். (ச)

## வாகனங்கள் சோதனை

(நெல்லியடி)

உடுப்பிட்டித் தொகுதியில் உள்ள வதிரிச் சந்தியில் ராணுவம்- பொலிஸ் என்பன கூட்டாக வாகனங்களைச் சோதனை செய்தார்கள். இச்சோதனைகள் காலை தொடக்கம் மாலை வரை நடைபெற்றது. (க)

## திடீர் பரிசோதனை

(கொழும்பு)

கொழும்பில் திடீர் பரிசோதனை மூலம் பதுக்கிவைக்கப்பட்டிருந்த 78,000 யார் சீத்தட்டிக் துணி, புடவை வகைகள் சிக்கின. [உ]

## விறகு தட்டுப்பாடு

[நெல்லியடி]

வடமராட்சிப் பகுதியில் என்றுமில்லாத அளவிற்கு விறகிற்கு பெருந்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்திலும் மற்றும் தனியார் மரக்காலைகளிலும் விறகினைப் பெற்றுக் கொள்ளமுடியாமல் பொது மக்கள் கஷ்டப்படுகின்றனர். [க]

# ஹிந்திமொழி திணிப்பில்லை'

## தமிழக அரசுக்கு பிரதமர் உறுதி



சென்னை, ஜூன் 4

"ஹிந்தி மொழி பேசாத மாநிலங்களில் எக்காரணம் கொண்டும் அம்மொழி திணிக்கப்பட மாட்டாது."

இவ்வாறு உறுதி கூறும் கடிதம் ஒன்றை இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் தமிழ்நாடு நிதிமந்திரிக்கு எழுதியுள்ளார்.

மொழி அமுல் விஷயத்தில் நேருஜியின் கொள்கை மீறப் படமாட்டாது என்றும் அவர் சொன்னார்.

நாட்டின் எந்தப்பகுதியிலும் ஹிந்தி திணிக்கப்பட்டால் அது நாட்டின் ஒற்றுமைக்கு ஊறுவிளைவிக்கும் என்று மேற்கு வங்க முதலமைச்சர் திரு. ஜோதிபாசு கருத்து வெளியிட்டிருந்தார் என்பதும் இக்கருத்தை தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் ஏற்றுக்கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

கர்ப்பிணிகள் மரணம்:

## நர்ஸ் கைது: மருத்துவமனைக்கு மந்திரி விஜயம்

சென்னை, ஜூன் 4

சென்னையில் உள்ள மருத்துவமனை ஒன்றில் பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்டிருந்த மூன்று கர்ப்பிணிகள் உரியமருந்துக்குப்பதிலாகவேறு மருந்து கொடுக்கப்பட்டதால் மாண்டது தொடர்பாக தலைமை நர்ஸ் உட்பட மூன்று நர்ஸுகள் தற்காலிக பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி மருத்துவ மனைக்கு சுகாதார அமைச்சர் திரு. சௌந்தரராஜன் சென்று பார்வையிட்டார்.

மேற்படி வார்ட் நர்ஸ் பொலிசாரால் கைதுசெய்யப் பட்டுள்ளார். (உ)

இஸ்மாயில் கமிஷன் சிபார்சு:

# சிறை அதிகாரிகள் 7 பேருக்கு தற்காலிக கல்தா

சென்னை, ஜூன் 4

இந்தியாவின் நெருக்கடி நிலை அமுலிலிருந்தபோது கடமை ஆற்றிய 7 சிறை அதிகாரிகளை தமிழ்நாடு அரசு தற்காலிக வேலைநீக்கம் செய்துள்ளது.

நெருக்கடிநிலை அமுலிலிருந்த போது சிறையிலிருந்த மிசா கைதிகள் துன்புறுத்தப்பட்டது தொடர்பாக விசாரணை செய்துவந்த நீதிபதி இஸ்மெயில் கமிஷனின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட பொரிசின் பேரிலேயே இவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

1976ம் ஆண்டு தி. மு. க. அரசு கலைக்கப்பட்ட பின்னர் சிறையில் இருந்த மிசா கைதிகள் துன்புறுத்தப்பட்டனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் சென்னை மத்திய சிறைச்சாலை சுப்பிரிண்டெண்ட் உட்பட 17 சிறை அதிகாரிகள் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

## ஷா கமிஷன் அறிக்கை

சென்னை, ஜூன் 4

ஷா கமிஷன் அறிக்கையின் பல்வேறு அம்சங்கள் பற்றி அரசாங்கம் தற்போது ஆராய்ந்துவருவதாக சென்னையில் மத்திய அமைச்சர் திரு. ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தெரிவித்தார்.

ஷா கமிஷன் அறிக்கை மீது நடவடிக்கை எடுப்பதற்கான தாமதம் பற்றி விளக்குகையில் அமைச்சர் இவ்வாறு சொன்னார்.

இந்திரா காங்கிரஸார் கிளர்ச்சியில் ஈடுபட்டால் அதைச் சமாளிக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர் கூறினார். (உ)

## அமெரிக்கா ஆலோசனை

வாஷிங்டன், ஜூன் 4

சோமாலியா மீதான ஆயுத விநியோகத் தடையை நீக்குவதுபற்றி அமெரிக்கா ஆலோசித்து வருகிறது. (உ)

## கூ. சங்கங்களில் மெட்ரிக் அளவு முறை

[கொழும்பு]

கூட்டுறவுச் சங்கங்களில் இனிமேல் நிறுத்தலளவையில் மெட்ரிக் முறை கொண்டுவரப்பட்டிருக்கிறது.

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் இதற்கான நடவடிக்கை எடுத்துள்ளது.

விசேட நிதியில் இருந்து உபகரணங்கள் வாங்கப்படும். (உ)

## திராவிட மொழியியல் மகாநாடு

சென்னை, ஜூன் 4

திராவிட மொழியியல் பற்றிய மகாநாடு கடந்த 1ம் திகதி சென்னையில் நடைபெற்றது. திராவிட மொழி இயல் அறிஞர்கள் பலர் இம்மகாநாட்டில் கலந்துகொண்டு ஆய்வுகள் நிகழ்த்தினார்கள்.

தமிழ் நாடு கல்வியமைச்சர் திரு. அரங்கநாயகம் இந்த மகா நாட்டில் பேசும்போது திராவிட மொழிகளில் கல்வி போதிக்கும் முறையொன்று வகுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

திராவிட மொழிகளின் சரித்திர ஆராதி இல்லாத குறையை அறிஞர்கள் தீர்த்து வைக்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

## "இன, மதபேதம் களைந்தாலே சுபிட்சம்"

— அமைச்சர் மொஹமத்

(கொழும்பு)

"இன, மத, வேறுபாடுகளை மறந்து செயற்பட்டாலே நாட்டில் உண்மையான சுபீட்சத்தைக் காண முடியும்" என்று போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். மொகமத் கூறினார்.

ஹேவாகெட்டியாவில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு பேசுகையில் அமைச்சர் இவ்வாறு சொன்னார்.

பிராந்திய சபைகளுடன் பொது மக்கள் ஒத்துழைப்பதன்மூலம் பல்சேவைகளை முன்னேற்றலாம் என்றும் அவர் குறிப்பிட்டார். (உ)

## நெப்போலியன் வி. க விழா

(நெல்லியடி)

பருத்தித்துறை நெப்போலியன் விளையாட்டுக்கழக 18 வது ஆண்டு விழா எதிர்வரும் 9 ம் திகதி முதல் 11ம் திகதிவரை நடைபெறவுள்ளது. இதனை யொட்டி 50 மைல் சைக்கிள் ஓட்டம், 10 மைல் மரதன் ஓட்டம், தலையணைச் சண்டை, ஆணழகன் போட்டி, மற்றும் பல போட்டிகளும் நடைபெறவுள்ளன.

## "பாரதம் மீது உலக நாடுகள் பேரபிமானம்"

— ஜெகஜீவன்ராம்

புதுடில்லி, ஜூன் 4

தமது 13 நாள் வெளிநாட்டு விஜயத்தை முடித்துக்கொண்டு பாரத பாதுகாப்பு அமைச்சர் திரு. ஜெகஜீவன் ராம் நேற்று நாடு திரும்பினார்.

சோவியத் யூனியன், பிரிட்டன், யூகோஸ்லேவியா ஆகிய நாடுகளுக்கு அவர் விஜயம் மேற்கொண்டிருந்தார்.

பாரதத்தின்மீது உலக நாடுகள் வைத்துள்ள பேரபிமானத்தை தமது விஜயம்மூலம் அறிந்துகொள்ளக்கூடியதாக இருந்தது என்று அவர் தெரிவித்தார். (உ)

சைப்பிரஸ் பிரச்னை:

## சமரஸ முயற்சியில் ஐ. நா. செயலாளர்

நியூயோர்க், ஜூன் 4

சைப்பிரஸ் பிரச்னை தொடர்பாக துருக்கி, கிரேக்கத் தலைவர்கள் மீண்டும் சந்தித்துப் பேசுவதற்கான முயற்சியைத் தாம் தொடர்ந்து மேற்கொண்டிருப்பதாக ஐ நா பொதுச் செயலாளர் கலாநிதி வால்ட்ஹெய்ம் கூறியிருக்கிறார்.

ஐ நா பாதுகாப்புச்சபைக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கையொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (உ)

ஸயர் நெருக்கடி:

## ரஷ்யாவும் கியூபாவும் முக்கிய காரணம் சீன குற்றச்சாட்டு

பீக்கிங், ஜூன் 4

ஸயரில் ஏற்பட்ட நெருக்கடிக்கு சோவியத் யூனியனும் கியூபாவுமே முக்கிய காரணம் என்று சீன வெளிநாட்டமைச்சர் திரு. குவா ஹவா குற்றச்சாட்டியுள்ளார்;

சோவியத் யூனியன் ஆபிரிக்க நாடுகளில் தனது செல்வாக்கைப் பிரயோகிக்கப் பார்க்கிறது என்றும் அவர் கண்டனம் தெரிவித்தார். (உ)



**வெஸ்லி**
(காங்கேசன்துறை)
தினசரி 6-30, 9-45
முத்துராமன்-சுஜாதா
மயங்குகிறாள்
ஒரு மாது
புதிய பிரதி

**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
தினசரி
6-45, 10-00
ரஜனிகாந்த் - ஸ்ரீதேவி
நடித்த
மூன்று முடிச்சு

**Rio** (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
Telly Savalas
in
Pancho Villa
(Color — Western)

## பங்குக்குரவர் நியமிக்கக் கோரிக்கை

(உடுப்பிட்டி)
பருத்தித்துறைப் பகுதிக் கத்தோலிக்க மக்கள் பங்குக் குரவர் ஒருவர் இல்லாததால் பெரிதும்கஷ்டம் அனுபவித்து வருகின்றனர். இப்பகுதி மக்கள் பருத்தித்துறைப் பங்குக்கு நிரந்தரமாகக் குரவரொருவரை நியமித்துத் தருமாறு யாழ். மேற்றிராசனத்தைக் கோரியுள்ளனர்.

பருத்தித்துறை, குடத்தனை, புலோலி பகுதிகளைச் சேர்ந்த கத்தோலிக்க மக்கள் தமது மத அனுஷ்டானங்களுக்கும் தேவாலயக் கருமங்களுக்கும் கரவெட்டிப் பங்குக்குரவரையே நாடி அலையவேண்டியுள்ளதென்றும் இவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (அ)

# விஸ்வமடுவில் ஒருவர் கொலை
# சந்தேகநபர்களுக்கு வாரண்ட்

(யாழ்ப்பாணம்)
விஸ்வமடுவில் சரவணமுத்து செல்லையா என்பவர் பொல்லால் அடித்துக் கொலை செய்யப்பட்டார். சந்தேக நபர்களைக் கைது செய்ய வாரண்ட் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

யாழ். திடீர் மரண விசாரணை அதிகாரி திரு எஸ். கனகரத்தினம் மரணவிசாரணை நடத்தினார்.

சுப்பன் கனிமுத்து மரண விசாரணையில் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

சம்பவதினம் பகல் 12 மணிக்கு நான் வீட்டில் இருந்தேன். பாலசிங்கம் என்பவரும் அதே வளவில் இருந்தார். பிள்ளைகளின் சத்தத்தைக் கேட்டு நான் வெளியில் வந்தபோது சந்தேக நபர்களில் ஒருவரான ஆனந்தனும் இறந்தவரான செல்லையாவும் மல்லுக் கட்டினார்கள்

பொன்னுச்சாமி என்பவரும் நானும் அவர்களை விலக்குப் பிடித்தோம். அப்போது ஆனந்தனின் சகோதரனான பாலசிங்கம் ஓடிவந்தார். செல்லையா வீட்டிற்குள் ஓடியபோது அவரைத் துரத்திக் கொண்டு சந்தேக நபர்கள் இருவரும் இரண்டு பொல்லுகளுடன் ஓடினார்கள். செல்லையா ஒரு அறைக்குள் ஓட பாலசிங்கமும் அறைக்குள் ஓடினார். ஆனந்தன் அறைக்கு வெளியில் நின்றார் நான் ஆனந்தனிடம் அவரை அடிக்கவேண்டாம் என்று சொன்னேன். அதற்கு ஆனந்தன் என்நெஞ்சில் பொல்லால் இடித்தார். நான் கையால் தடுத்தபோது கையில் காயமேற்பட்டது.

அப்போது செல்லையா ஒரு அறைக்குள் இருந்து மற்ற அறைக்கு ஓட எத்தனித்தபோது ஆனந்தன் அவரைத் தாக்கினார். உடனே அவர் நிலத்தில் விழ பாலசிங்கமும் பொல்லால் தாக்கினார். தலையில் இருந்து இரத்தம் பெருகிய நிலையில் உடனடியாக கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் அங்கிருந்து யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப் பட்டார்''

படுகாயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்ட சரவணமுத்து செல்லையா மறுநாள் இறந்துவிட்டார்.

வைத்திய பரிசோதனை செய்த டாக்டர் சி. எம். சாந்திகுமார் சாட்சியமளித்ததை மரணவிசாரணை அதிகாரி கொலை எனத்தீர்ப்பளித்ததுடன், தலைமறைவாகியுள்ள சந்தேக நபர்களுக்கு வாரண்ட் பிறப்பித்து சந்தேக நபர்களை கிளிநொச்சி நீதவான் முன் ஆஜர் செய்யுமாறு உத்தரவிட்டார். (கா-அ)

## இன்று

(யாழ்ப்பாணம்)
திருநெல்வேலி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கோயில் நாகதம்பிரான் பொங்கல் விழா இன்று நடைபெறுகிறது.

விசேஷ நிகழ்ச்சியாக அமரர் வி. தட்சணாமூர்த்தியின் புதல்வன் செல்வன் வி. கி. உதயசங்கரின் தவில் கச்சேரி பிற்பகல் இடம் பெறும். (உ)

## திருட்டுப்போன வலைகள் மீட்பு
### மூவர் கைது

(பண்டத்தரிப்பு)
தமது 2000 ரூபா பெறுமதியான ஒன்பது வலைகள் களவு போய்விட்டதாக இளவாலையைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை அருளானந்தம் என்பவர் சங்கானைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து சங்கானைப் பொலிசைச் சேர்ந்த மான்

(6ம் பக்கம் பார்க்க)

## 50,000 ரூபா...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ரது சேவைகளும், அபிவிருத்திப்பணிகளும் அவரது பெயரை என்றென்றும் நினைவுறுத்திக்கொண்டே இருக்கும்'' என்றார்.

யாழ் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட் மறைந்த நகரசபைத் தலைவர் அமரர் நடராசாவின் உருவப் படத்தைத் திரைநீக்கம் செய்துவைத்தார்.

இவ்வைபவம் பருத்தித்துறை நகரசபை அலுவலகத்தில் நகரசபை விசேட ஆணையாளர் திரு. மு. ம. தனிகாசலம் தலைமையில் நடைபெற்றது. (உ)

**Regal** (Jaffna)
Daily at 4-30, 7-00 and 9-30 p.m., only
Stanley Baker in
SODOM AND GOMORRAH
Color — Romance — Action Film

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - ஈ. வி. சரோஜா
நடித்த
கொடுத்து வைத்தவள்
(புதிய பிரதி)

**வின்ஸர் — யாழ்ப்பாணம்**
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி — மஞ்சுளா — நாகேஷ்
நடித்த
எங்க தங்க ராஜா

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
[illegible]
கிரகப்பிரவேசம் (கலர்)

**லிடோ** போன்: 7698
சிவகுமார், அல்கா
(யாழ். நகர்)
மதனமாளிகை

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்) வெற்றிகரமான
தினசரி 4 காட்சிகள் 5வது வாரம்
முத்துராமன் — சந்திரகலா
நடித்த
காலங்களில் அவன் வசந்தம்

4வது ஹவுஸ்புல் வாரம்!
23நாட்களில்வசூல்சாதனை ரூ2லட்சம் இதன்மர்மம்என்ன?
**ராணி** (யாழ். நகர்)
சிவாஜி — மஞ்சுளா
நடித்த
உத்தமன்
(ஈஸ்ட்மன் கலர்)
காட்சி நேரங்கள் குறிப்பிடமுடியாமைக்கு வருந்துகிறோம்:

**சாந்தி** யாழ். நகர் — போன் 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ரவிச்சந்திரன்-ஜெயலலிதா-மேஜர்-சாவித்திரி
பாக்தாத் பேரழகி
ஜூன் 10-11 காலை 8-30 மணிக்கு மட்டும் AIBOLITT 66

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். — வாணிஸ்ரீ
நடித்த
ஊருக்கு உழைப்பவன்
12ந் திகதி முதல் பாட்டாளியின் சபதம்

வாழ்வில் விரக்தி!

## தூக்கிட்டு உயிர் மாய்த்தார் வயோதிபர்

(யாழ்ப்பாணம்)
நான்கு வருடங்களுக்கு மேல் நோய்வாய்ப்பட்டிருந்த வயோதிபர் ஒருவர் வாழ்வில் விரக்தியுற்றுத் தூக்கிட்டுத் தற்கொலைசெய்துகொண்டார். நல்லூர் அரசடிப்பகுதியில் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

அரசடி வீதியைச் சேர்ந்த வேலு கந்தையா (வயது 73) என்ற வயோதிபரே இவ்வாறு மரணமானவராவார்.

இம்மரணம் தொடர்பான மரண விசாரணையை யாழ். திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் நடத்தினார். இறந்தவரின் மகளான திருமதி செல்வரத்தினம் மங்கையற்கரசி சாட்சியமளிக்கையில், "இறந்தவர் எனது தகப்பனார் கடந்த நான்கு வருடங்களாக நோயினால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்த இவர் இதனால் வாழ்வில் விரக்தியுற்று அடிக்கடி தற்கொலை முயற்சிகளில் ஈடுபட்டார்.

சம்பவதினம் இரவு சாப்பிட்டுவிட்டு படுத்தபின் காலையில் அவரைக் காணவில்லை; தேடிப்பார்த்தபோது முன் வளவில் மரத்தில் கயிறுகட்டித் தொங்கிய நிலையில் காணப்பட்டார் என்றார்.

விசாரணை முடிவில் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப் பட்டது. [கா]

தாயின் சேலைகளை விற்று

## உல்லாசச் செலவு செய்த மகன் குற்றத்தை ஏற்றார்

(பண்டத்தரிப்பு)
தமது தாயாரின் சேலைகளைத் திருடிவிற்று ஆடம்பரச்செலவுகள் செய்ததாக குற்றம்சாட்டப்பட்ட இளைஞர் ஒருவரையும், மற்றொரு இளைஞரையும் மல்லாகம் மாவட்ட நீதிபதி முன்னிலையில் பொலிசார் ஆஜர் செய்தனர். நீதிபதி அவ்விரு இளைஞர்களையும் தலா 500 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து குற்றத்தை ஒப்புக்கொண்டார். அவர்களுக்குத் தீர்ப்பு வழங்குவதை இம்மாதம் 14ம் திகதிக்கு ஒத்திவைத்தார். வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திருமதி, இராசலட்சுமி என்னும் பெண் ஒருவர் தமது பெறுமதிமிக்க ஆறு சேலைகளை யாரோ களவெடுத்து சென்றுவிட்டதாக சங்கானை பொலிஸ் நிலையத்தில் புகார் செய்ததை அடுத்து புலன்விசாரணையில் ஈடுபட்ட சங்கானை பொலிஸ் நிலைய கான்ஸ்டபிள் திரு. எஸ் சிவபாதசுந்தரம் சந்தேகத்தின் பேரில் முறைப்பாடு செய்த பெண்ணின் மகனான சுதாகரன் என்பவரை விசாரணைசெய்தபோது பிரஸ்தாப சாரிகளை தானும் தமது நண்பன் ஜெயகுமார் என்பவரும் சேர்ந்து எடுத்துக்கொண்டு போய் விற்றுவிட்டதாகவும். அப் பணத்தைக் கொண்டு சினிமாப் படம் பார்ப்பது போன் உல்லாசங்களில் ஈடுபட்டதாகவும் தெரிவித்தனராம்.

இதையடுத்த இரு இளைஞர்களும் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்ற நீதிபதி திரு எஸ். ஆனந்தகுமாரசாமி முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டனர்.

கைப்பற்றப்பட்ட சேலைகளும் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டன. இரு இளைஞர்களும் தாங்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து நீதிபதி இருவரையும் தலா 500 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து தீர்ப்பு வழங்குவதை இம்மாதம் 14ம் திகதிக்கு ஒத்திவைத்தார். (உ)

## மகனை ஏசிய தந்தை
## கிணற்றில்குதித்துதற்கொலை

(யாழ்ப்பாணம்)
மகனை ஏசிய 59 வயது தந்தை மனைவிக்கு சவால் விட்ட பின்னர் கிணற்றில் குதித்து தற்கொலை செய்துகொண்ட சம்பவம் ஒன்று இணுவிலில் நிகழ்ந்துள்ளது.

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் காவலாளியாகக் கடமையாற்றிய சிற்றம்பலம் கந்தையா என்ற இந்த நபர் நீண்டநாட்களாகத் தமது ஓய்வூதியம் கிடைக்கவில்லை என்ற மனக் கவலையில் அடிக்கடி மது அருந்திவந்தார் என்றும் சம்பவதினம் வீட்டில் ஒருவன் உடைந்தது குறித்து மகனை ஏசியபின் மனைவியுடன் வாக்குவாதப்பட்ட பின்னர் என்ன செய்கிறேன் பார் என்று அருகில் உள்ள வயல் கிணற்றில் விழுந்தாராம். பின்னே ஓடிச்சென்றவர்கள் அவரை வெளியே தூக்கியபோது அவரது உயிர்பிரிந்திருந்ததாம்.

விசாரணை நடத்திய யாழ். பதில் நீதவானும் மரண விசாரணை அதிகாரியுமான திரு. எஸ். அமிர்தலிங்கம் தற்கொலை எனத்தீர்ப்பளித்தார். [இ]

